RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd2312

Asian Research Association

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

# Literariness in Saiva Anthaathi

## சைவ அந்தாதிகளில் இலக்கிய நயங்கள்

S. Shanthi [a, *]

[a] Department of Tamil, Vels Institute of Science, Technology & Advanced Studies (VISTAS), Chennai-600117, Tamil Nadu, India.

*Corresponding author Email: shanthitvm2020@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2311

Received: 05-01-2023; Revised: 26-02-2023; Accepted: 01-03-2023; Published: 06-03-2023

**Abstract:** Religious based work in Tamil literature has a long tradition. Anthaathi was in use among the people as oral literature. Despite the similarities and stylistic elements of Anthaathi in other literatures, Anthaathi did not emerge as a distinct literary form. At the end of the 5th century A.D Anthathi began to emerge as a distinct literary form under the name of Anthaathi literature. They grouped these types of literature into 96 types of minor literary works. It is this book that has come out in large numbers and has established itself in the line of minor literary works. This article examines the literary motifs that emerge in the Saiva Anthaathi.

**Keywords:** Anthaathi, Anthaathi Literature, Religious, Minor Literary

**Language:** Tamil

## முன்னுரை

தொல்காப்பியர், "சுட்டும் எண் வகை வனப்புகள் இலக்கிய வகைகளாகக் கொள்ளலாம் என்றும் அகம், புறம் என இவ்விரண்டினையும் கூட்டி வனப்பினை பத்து வகைகளாக கொள்ளலாம்" எனக் கூறியுள்ளார். புதுவகையான இலக்கியப் படைப்பைத் தொல்காப்பியர்,

"விருந்தே தானும்

புதுவது புனைந்த யாப்பின் மேற்றே" (Tholkappiyar, 1993)

என்று கூறுகிறார்.

## அந்தாதி

அந்தாதி என்னும் சொல் அந்தம் + ஆதி என்ற இரண்டு சொற்களால் ஆகிய வடமொழித் தொடராகும். 'அந்தம்' என்பது முடிவு. 'ஆதி' என்பது தொடக்கம். இவ்விரண்டும் சேர்ந்தது அந்தாதியாகும். சங்க இலக்கியத்தில் அந்தாதி என்னும் சொல்லைக் காண முடியவில்லை. ஆனால், அந்தாதி என்ற சொல்லைத் தமிழ்ச் சொல்லாக காண்பர்" அந்தத்தில் ஆதி என்ற முறையில் நினைவு கொள்ளுவதற்கும் தொடர்ந்து மாலையாக அமைத்தற்கும் ஏற்ற முறையில் விளங்குவது அந்தாதி என்னும் வகையாகும் (Muthappan, 1998).

இறைவன் ஆவியும் அந்தமும் இல்லாதவன் என மாணிக்கவாசகர் கூறுவதை, "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி" என்னும் அடிகள் மூலமாகக் காண முடிகின்றது. அந்தாதி என்னும் சொல்லாட்சியைக் காரைக்கால் அம்மையாரின் பாடல் அற்புதத் திருவந்தாதியில் காண முடிகிறது (Manikkavasaga Swamigal, 1949).

### அந்தாதி சமயம் சார்ந்து வளர்ந்த விதம்

அந்தாதி இலக்கியம் எல்லாச் சமயத்தாராலும் விரும்பி இயற்றப்பட்டது. இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, பக்தி, தத்துவம், வரலாறு, காதல், போர் செய்திகள் போன்ற பல வகை நிலைகளில் சமயத்தைச் சார்ந்து வளர்ந்தது. சமயங்கள் தங்களுடைய உண்மைகளை வெளிப்படுத்தும் களமாக அந்தாதி இலக்கியங்கள் மிகுதியாக பயன்பட்டுள்ளன. சமய அடிப்படையில் இவ்விலக்கியத்தை நோக்கும் பொழுது சைவ சமயம் முதல் இடம் பெறுகிறது. சைவ சமய கடவுளில் சிவன், உமையம்மை, கலைமகள், திருமகள், முருகன், விநாயகர் முதலிய தெய்வங்களுக்கு அதிகமாக அந்தாதி இலக்கியம் பாடப்பட்டுள்ளன.

சைவ சமயத்திற்கு அடுத்த நிலையில் அந்தாதி இலக்கியத்தைப் பாடுவதில் வைணவம், இஸ்லாம், கிறித்துவம், சமணம் முதலிய சமயங்களில் இடம் பெற்றுள்ளன. சைவ சமயத்தைப் பொருத்தவரை சம்மந்தர் பதிகம் ஒன்றைத் தவிர, அந்தாதி அமைப்பு தேவாரங்களில் வேறு இல்லை. ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவில் ஏழு பதிகங்கள் அந்தாதித் தொடையில் அமைந்தவை. பதினோராம் திருமுறையில் எட்டு அந்தாதிகள் உள்ளன.

### சைவ சமயத்தில் அந்தாதி

சைவ அடியவர்களின் எளிமையான சுருக்கமான அமைப்புடன் கூடிய இவ்விலக்கியத்தின் கொள்கையை, இறைவனின் பெருமையைப் புகழ்ந்து பாடுவதற்காகக் கையாண்டனர். சைவ சமயக் கொள்கைகளைப் பின்பற்றி அடியவர்கள் பாடக்கூடிய அந்தாதிகளே சைவ அந்தாதிகள் என வழங்கப்பட்டன. இவ்வாறு, சமயத்தின் கொள்கைகளையும், தத்துவார்த்த உண்மைகளையும், பக்தி நெறிகளையும் வலியுறுத்தவனாகச் சைவ அந்தாதிகள் அமைந்துள்ளன.

சைவ சமயத்தின் உன்னத நிலையையும், பிற சமயத்தில் இருந்து இச்சமயம் வேறுபட்ட நிலையும், மக்களுக்கு அணுக்கமாக இருக்கக்கூடிய சமயமாகவும், சமயக் கருத்துக்களை வெளிப்படுத்துவதாகவும் இவ்வந்தாதிகள் படைக்கப்பட்டுள்ளன.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற அவ்வையாரின் கூற்று கேட்ப, ஒவ்வொரு ஊரிலும் கோயில்கள் இருப்பதைக் காணலாம். ஓர் இலக்கியத்தை இரண்டு பெரும் சக்திகள் இயக்கி வந்துள்ளன. அவை, ஒன்று சமயம் இரண்டு அற்புத கதைகள். சிவனையும், சிவனுறையும் தளத்தையும் மையமாகக் கொண்டு அந்தாதி பாடத் தொடங்கினார்.

### சைவ அந்தாதியில் இலக்கிய நயங்கள்

ஒரு சாதாரண மனிதன் காணுகின்ற காட்சியை, ஒரு கலைஞன் காணும்போது அக்காட்சியைத் தன் கற்பனைத் திறத்தினால் கவிதையாக வெளிப்படுத்துகிறான். மனிதனின் எண்ண ஓட்டத்திற்கும் சிந்தனைச் சக்திக்கும் ஏற்பக் கற்பனைக் கவிதையாக உருமாறி வெளிப்படுகின்றது. இம்மாற்றந்தான் நாளடைவில் பக்தி முதன்மைப்படுத்தக்கூடிய இலக்கிய வடிவங்களாக உருப்பெற்றுள்ளன.

பக்தி இலக்கியம் இறைவனை உணர்த்தவும் உணரவும் கற்பனையைத் துணைக் கொண்டது. படைப்புக்குக் காரணமான பரமனை, உலகிற்கு மூலமான ஆற்றலை, நிலைப்பேற்றிற்கு அடிப்படையான முதல் பொருளை, அறிவுக்கு அறிவான மெய்ப்பொருளைத் தன் கற்பனையால் பலவிதமாக படைத்துக் குறுக்கிக் கொண்டான் படைப்பாளி, "தேவாரம் பாடிய மூவரும் தாம் காட்ட விழைந்த மெய்ப்பொருட் காட்சியை, நுண்பொருள் தத்துவத்தை, நம் கண் முன்னே காணவல்ல கலையாய் மாற்றிப் பண்ணார்ந்த தமிழ் வடிவில் சிந்தனைக்கினிய செவிக்கினிய நல்விருந்தாய் நல்கியுள்ளனர். இலக்கிய முறையில் நோக்கின் காணப்பொருளைக் கண்முன் காட்ட முனைந்த முயற்சியின் கைவண்ணங்களை மூவர் தேவாரக் கற்பனையில் காணலாம்."

## படைப்புக் கற்பனை

"கவிஞன் ஒருவன் தன் அனுபவத்தில் கண்ட சிறப்புகளை ஒருவிதக் கட்டுப்பாடுமின்றித் தானாகத் தெரிவு செய்து கொண்டு, புதியதொரு படைப்பினை உருவாக்குவது படைப்புக் கற்பனையாகும். உணர்ச்சியே கலையின் உயிர், அதுவே வாழ்வின் அடிப்படை உணர்ச்சியொட்டியே வாழ்க்கையின் மற்ற கூறுகளும் அமையும்" என்கிறார் வின்செசுடர்.

"இருளால் மிடற்றால் ராப்பகல் தன்னார் வரை மறையால்

பொருளாளர் கமழ் கொன்றை யால் முல்லை புறறருவாடுதல்

தெருளார் மதி வீசும் பால்வெளவஞ் தொண்டு புனல் தாங்குதலாய்

அருளாற் பலபல வண்ணமு மால்அரண் ஆயினனே" (2-59)

என்பதில் சிவபெருமான் இரவு பகலாகவும், மாலை கொண்டு இருப்பதால் குறிஞ்சியாகவும், கொன்றை அணிந்ததால் முல்லையாகவும், பாம்புகள் இருப்பதால் புற்றாகவும், சந்திரன் பெற்றதால் ஆகாயமாகவும், நீர் தாங்குவதால் கடலாகவும் இருக்கிறான் எனச் சேரமான் தமது படைப்பில் கற்பனைத் திறனை வெளிப்படுத்தியுள்ளார். சமயத்துறையில் வழிபாட்டு உணர்ச்சிக்குப் பழைய காதல் கற்பனைகள் முழுவதும் பயன்படும் போது இலக்கியம் புதிய வடிவம் பெற்று வரலாயிற்று.

## இயைபுக் கற்பனை

ஒரு பொருளின் கருத்து அல்லது உணர்ச்சி ஆகியவை சம்பந்தப்பட்ட உணர்வால் ஒன்றியுள்ள காட்சிகளை இணைத்துக் காண்பது இயல்புக் கற்பனையாகும். இறைவன் இமயம் உமையம்மையாருக்குத் தன் உடலில் சரிபாதியைக் கொடுத்ததற்குரிய காரணம் வினவுவார் போன்று புனைந்த கற்பனையில் உமை மீது நீ வைத்துள்ள பெரு விருப்பத்தால் அவளை விட்டு நீ வேறாய் இருக்கவில்லையோ? அவளுக்கு இருக்க வேறு இடமில்லையோ? உன்னை விட்டுப் பிரிந்து அவள் தனியே இருக்க அஞ்சுகின்றாளோ? இக்காரணத்தால் இருவரும் இருவரல்லர் ஒருவரே எனத் தெளிவுபடுத்துகிறார் அம்மையார். இதனை,

"விரும்பினால் நீ பிரிய இல்லாயோ வேறோ

இருப்பிடம்மற் றில்லையோ என்னோ- பொருப்பன் மகள்

மஞ்சு போல் மால்விடையாய் நிற்பிரிந்து வேறிருக்கு

அஞ்சுமோ சொல்லாய்; அவள்" (1-194)

எனக் கூறுகிறார்.

சிவஞான முனிவர், சிவனுக்கும் திருமாலுக்கும் உள்ள மிக நெருக்கமான உறவினைக் கற்பனையாகக் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறார்.

"மாயனைக் கணையாக ஏவினை

மாயனைப் படையாக ஊர்ந்தனை

மாயனைத் திரு மனைவியாக்கி மன்

மணந்து சாதனைத் தந்தளித்தனை

மாயனுக்கொரு பாகம் ஈந்தனை

மாயன் உள்ளமே கோயில் கொண்டனை

மாயன் நேந்திரம் மலர்ந்த

வரத போற்றி தென் கலைசை ஈசனே" (9-99)

முப்புரத்தை அழிக்கப் புறப்பட்ட முதல்வனுக்குத் திருமால் அம்பாவாகவும் அமர்ந்து செல்லும் விடையாகவும் பயன்பட்டார். தாருகாவன முனிவர்களின் செருக்கை அடக்கத் திருமாலைப் பெண்ணுருவம் கொள்ளச் செய்து பின்னர் அந்நங்கையை மணந்தார் எனக் கூறப்படுகிறது.

### கருத்து விளக்கக் கற்பனை

இயற்கைக் காட்சிகளைக் கண்ணுறும் கவிஞன் தான் கண்டவற்றை அப்படியே கூறாது, அக்காட்சிகளால் தன் உள்ளத்தில் கிளர்ந்தெழும் உணர்ச்சிகளை சித்தரித்தால் அதனைக் கருத்து விளக்கக் கற்பனை என்று கூறப்படுகிறது. இது தற்குறிப்பேற்ற அணி ஆகும். "மனித உணர்ச்சிகளை இலக்கிய வடிவில் பாடச் செய்துவைக்கின்றான் புலவன். விலை மதிப்பில்லாத இவ்விலக்கியப் பாடங்களை, உணர்ச்சியின் திரட்சிகளை ஒவ்வொருவரும் அறிந்து கொள்வது மனிதப் பண்பாடாகும்" என்பார் வ.சுப.மாணிக்கனார் (Manikkam, 1965).

இறைவனின் திருமேனி அழகை இயற்கையுடன் தொடர்படுத்தித் தன்னுடைய கற்பனை நயத்தை மிளிரச் செய்கின்றனர். காலை நேரம் சூரிய உதயத்தின் போது வானம் அவன் அணிந்த வெண்ணீறு போலவும், மாலையில் சூரியன் மறைகின்ற போது ஞாயிற்றுக் கதிர்கள் பல திசைகளிலும் பல கம்பிகள் போலவும் வீசுவதால் அவற்றின் தோற்றம் இறைவனின் விரிந்த சடை போல் இருப்பதாகக் கற்பனை செய்கின்றார். இதனையே,

"காலையே போன்றிலங்கம் மேனி கடும் பகலின்

வேலையே போன்றிலங்கம் வெண்ணீறு - மாலையில்

தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை" (1-65)

எனக் காரைக்கால் அம்மையாரின் கருத்து விளக்கக் கற்பனையை அடியொட்டி சேரமான் பெருமாள் நாயனார் அப்படியே புனைகின்றார். இதனை,

"விரிகின்ற ஞாயிறு போன்ற மேனியஞ் ஞாயிறு சூழ்ந்(து)

எரிகின்ற வெங்கதில் ஒத்தது செஞ்சடை" (2-26)

என்ற அடிகளால் அறிய முடிகிறது.

சைவ அந்தாதி இலக்கியத்தில் மெய்ப்பாட்டுக் கூறுகள் 1. படைபாளனின் படைப்பாக்கத்தில் வெளிப்படும் கவிஞனின் உள்ள உணர்ச்சி. 2. படைப்பாக்கத்தில் படைக்கப்படும் பாத்திரப்படைப்புகளின் உணர்ச்சி என்பனவாகும்.

சைவ அந்தாதி இலக்கியத்தில் மேற் சொன்ன இரு வகையான உணர்ச்சி வெளிப்பாடுகளையும் காண முடிகின்றது. கவிஞனின் பாத்திரப்படைப்பான தடைத்த நிலையில் இறைவனின் உணர்ச்சி வெளிப்பாடுகளையும் உலகில் வாழ்க்கையில் ஈடுபட்டு பாச உணர்ச்சிக்கு ஆட்பட்டு அருள்படும் உயிர்களின் நிலையையும் சைவ அந்தாதி இலக்கியத்தின் மூலம் காண முடிகின்றது.

சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் முப்பொருள் உண்மையாகிய பதி, பசு, பாசம் என்ற மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு, அவைகளின் செயல்பாட்டுத் தன்மைகளில் அவை வெளிப்படுத்தும் உணர்ச்சி வெளிப்பாட்டை விளக்குகிறது. எல்லா வகையான மெய்ப்பாட்டுப் பிரிவுகளையும் சிற்றிலக்கியத்தில் ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். சைவ அந்தாதிகளில் எட்டு வகையான மெய்ப்பாடுகளைக் காணலாம்.

## சைவ அந்தாதியில் எட்டு வகை மெய்ப்பாடுகள்

1. நகை 2. அழுகை 3. இளிவரல் 4. மருட்கை 5. அச்சம் 6. பெருமிதம் 7. வெகுளிச்சுவை 8. உவகை. 1. நகை: மனதில் தோன்றும் இன்ப உணர்ச்சியினை அது தோன்றும் புலன் வழியாகவே வெளிப்படுத்தவல்லது நகை ஆகும். 2. அழுகை: நகைக்கு எதிரான மெய்ப்பாடு அழுகையாகும். இதனை, அவலம் எனவும் கூறலாம். மகிழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது நகை. துன்பத்தை அடிப்படையாகக் கொண்டு கண், வாய் முதலிய புலன்வழித் தோன்றும் மெய்ப்பாடு அழுகையாகும். 3.

இளிவரல்: இளிவு, இழிவு ஆகிய இரண்டும் ஒரே பொருளையே குறிக்கும். இளிவரலும் அழுகையும் நெருங்கிய தொடர்புடையன. தொல்காப்பியரும் இது கருதியே அழுகைக்கு அடுத்து இளிவரலை வைத்தார் போலும். இளிவரலால் அழுகை தோன்றும். 4. மருட்கை: மருட்கை என்பது வியப்பாகும். நம் எண்ணத்திற்கும் கற்பனைக்கும் மாறாக இருப்பது வியப்பைத் தரும். இப்படித்தான் இருக்கும் என நாம் எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது அது வேறுபட்டுத் தோன்றின் நம்மிடத்தில் ஓர் உணர்ச்சி தோன்றும். அதுவே மருட்கையாகும். 5. அச்சம்: கற்பனையாக ஒன்றை நினைத்தோ அல்லது நேரில் கண்டு அஞ்சுவதோ அச்சமாகும். 6. பெருமிதம்: எல்லோரும் ஒப்பநில்லாது தனித்து நிற்றல் பெருமிதம் எனப்படும். 7. வெகுளிச்சுவை: வெகுளி என்பது சாதாரணமாக வரும் சினம் அல்லது கோபம் என்பதிலும் மாறுபட்டதாகும். 8. உவகை: நகையோடு தொடர்புடையதும் நகையின்றி சிறிது மாறுபட்டதுமான மெய்ப்பாடு உவகை எனக் கூறப்படுகின்றது.

## பக்திச் சுவை

"பக்தி என்பது 'தான்' என்ற நிலையிலும் இறைவன் என்ற நிலையிலும் ஓர் ஒருமை ஏற்பட்டதாக உணர்கின்ற உணர்வே ஆகும். எனவே, அது உண்மைச் சமயத்தின் உயிர்நாடியாகும். சமய வாழ்வு என்பது பக்தியின் உள்ளீடும் வாழ்வும் ஆகும். எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளிடத்தில் அதாவது, பரமாத்மாவிடத்தில் எல்லாம் வல்லதான ஜீவான்மா செலுத்தும் அன்பே பக்தி எனப்படும்".

## முடிவுரை

இறைவனைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்று மனித மனம் முயல்கின்ற முயற்சியைப் பக்தி நிலையாகக் கருதலாம். பரம்பொருளைப் பற்றி நிற்பதும், தத்துவ நிலையில் இருக்கும் கடவுளை அனுபவ நிலையில் கண்டு இன்புற நினைப்பதும் பக்தியே ஆகும். பக்தி சமய வாழ்வின் சாரமாகவும் தனிப்பட்ட பக்தியாகவும் உள்ளது. கடவுள் என்பது எங்கோ விண்வெளியில் இருக்கும் பொருளன்று. கடவுள் என்றும் எப்பொழுதும் மக்களின் உள்ளே உறைகின்றாம் எனக் கூறப்படுகிறது.

## References

Manikkam, V.S. (1962) Tamil Kadhal, Paari Nilayam, Chennai, India

Manikkam, V.S. (1965) Ilakkiya Vilakkam, Tamil Man Pathippagam, Chennai, India

Manikkavasaga Swamigal, (1949) Thiruvasagam, Gnanasambandam Pathippagam, Tharumapuram, India

Muthappan, P. (1998) Sivagyana Munivarin Andhadhi Ilakkiyangal, Uma Pathippagam, Chennai, India

Tholkappiyar, (1993) Tholkappiyam, International Institute of Tamil Studies, Chennai, India

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

S. Shanthi, Literariness in Saiva Anthaathi, Indian Journal of Multilingual Research and Development, Vol 4, Iss 1 (2023) 9-13. DOI: https://doi.org/10.54392/ijmrd2312